
உ
சிவமயம்

# நினைவு மலர்





சுண்ணாகம் தெற்கு,
முருகேச பண்டிதர் வீதியைப் பிறப்பிடமாகவும்,
கனடா மொன்றியலில் வாழ்ந்து
அமரத்துவமாகிய சைவ வேளான்குல இதயதெய்வம்
அமரர் உயர்திரு. சின்னத்தம்பி இராசையா அவர்கள்
சிவபதம் எய்தியமை குறித்து வெளியிடப்பெற்ற

**நினைவு மலர்**

**21.03.2015**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

அன்பாலும், பண்பாலும்,
பாசத்தாலும், எங்களை அரவணைத்து,
ஆதரவு காட்டி எங்கள் சீரிய வாழ்வுக்கு
வழிகாட்டியாக விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வம்
அமரர். **சின்னத்தம்பி இராசையா**
அவர்களின் பாதக் கமலங்களுக்கு
இந் நினைவு மலரை
அன்புடன் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்
**15. 12. 1927**

மறைவு
**18. 02. 2015**

## அமரர். திரு. சின்னத்தம்பி இராசையா

(பேரன் இராசையா)

### திதி நிர்ணய வெண்பா

ஜய வருசமானதோர் மாசித்திங்களில்
மேஷ அவிட்டமதில் அமாவாசைத் திதியில்
ஊர் போற்றும் உத்தமன் இராசையா
பார்விட்டு பரமன் திருவடி அடைந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய தெய்வம்

இதய தெய்வம் எங்கள் இனிய ஐயாவே
இழந்து விட்டோம் என்று எண்ண முடியவில்லை
பொன்னுப்பிள்ளை தன் மகனாய் புவியில் நீ
- உதித்தாய்
சின்னத் தம்பியின் புத்திரனாய் சீர்
- பல பெற்றிருந்தாய்

சைவவேளான் குல தெய்வேந்திர முதலியார்
வழிவந்த செந்தமிழ்ச் செல்வன் நீ
இராச வாழ்வு வாழ வேண்டி உனக்கு
இராசையா எனப் பெயருமிட்டார்.

ஒரு மழை மாதத்தில் மார்கழியில்
ஆயிரத்து தொளாயிரத்து இருபத்தேழு
- பதினைந்தில்
தன்னிகரில்லா தமிழீழம் சுண்ணாகம்
உன்னைத் தத்தெடுத்துக் கொண்டது.

உன் அடிப்படைக் கல்வி தமிழ்தான்
அது உன்னை ஊரறிய வைத்தது.
தந்தையை இழந்து தனியனாய்
தாயின் அரவணைப்பு உன்னை ஆளாக்கியது.

மாமனரும் பேரனும் மாறி மாறி அன்பு காட்ட
மதிப்புறு மனிதனாக நீ வளர்ந்தாய்
உழுதுண்டு வாழ்வதே வாழ்வு என்று
ஊர் போற்ற மூவிடத்தில் கமமும் செய்தாய்

பதினேழில் தொடங்கிய உன் பணி ஐயா
எண்பத்தெட்டு வரை தொடர்ந்தது
ஊருக்கு எல்லாம் பணிகள் செய்த நீ
உனக்குப் பணி செய்ய எம்மை விடவில்லை!

குலம் தளைக்க குலமணியைக்
கைப் பிடித்தாய் உன் மனம் தளைக்க
வந்தவளின் பெற்றவர்கள் பொன்னையா
- அன்னமுத்து மதிப்புறு மாமனும் மாமியுமானர்.

பிள்ளைப் பாக்கியம் பெரும் பாக்கியம்
மூன்று ஆண்கள் இரண்டு பெண்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர் கனடாவில் ஒருவர் தாயகத்தில்
பஞ்ச பாண்டவர் என ஐவர் இவர்.

முதல் மகன் நடராஜா கனடாவில்
இளையவர் இரவீந்திரன் இப்போது இல்லை
2000ம் ஆண்டு கனடாவில் இயற்கை அவரைக்
- காவு கொண்டது.

மூன்றாவது மகள் பத்மினிதேவி அவர் கனடாவில்
நான்காவது மகன் பத்மநாதன் கனடாவில்
செல்வராணி ஐந்தாவது மகள் தாயகத்தில்
கண்ணிறைந்த ஐந்து பிள்ளைகள்
கற்கண்டு போன்ற பதினான்கு பேரப்பிள்ளைகளும்
- ஒரு பூட்டப்பிள்ளை

ஊர் மெச்ச வாழ்ந்தார் எம் தந்தை
உதவுவது தான் இவரின் பொழுது போக்கு
வாழ்வு வேண்டி நின்றார்க்கு வாழ்வளித்தார்
வளங்கள் பல எமக்குக் காட்டி நின்றார்.

உழைப்பு இவரின் உயிர் மூச்சு
ஒரு நிமிடமும் வீணே கழிக்க மாட்டார்
வெறுப்பு, வீண்வம்பு ஏதுமில்லை
விதண்டா வாதம் எதுவும் பேசமாட்டார்
பிள்ளைகளின் திருமணத்தை நடாத்தி வைத்துப்
பெருஞ் சிறப்பு கண்ட பெருமகன் நீ
ஊருக்கெல்லாம் அறிவுரையும் தந்து நின்றாய்

அறம் பல செய்தாய்
ஆலயப் பணிகள் செய்தாய்
இலகடி வைரவர் கோவில்
உன் இதய தெய்வம் ஆனது

சிவ பூதவராயர் உன் குல தெய்வம்
இலகடி வைரவர் உன் அரு கிருந்த தெய்வம்
ஓலைக் கொட்டிலை கல்லினால் கட்டினாய்
ஓயாது தொண்டுகள் பல செய்தாய்

சிவபூதவராயர் அறங் காவலரின்
நீ நீண்ட கால உறுப்பினர்
ஆலய திருப்பணியை ஆர்வமுடன் நீ ஏற்றாய்
அதில் முழு மனத்துடன் உன்னை இணைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபூதவராயர் அறங் காவலரின்
நீ நீண்ட கால உறுப்பினர்
ஆலய திருப்பணியை ஆர்வமுடன் நீ ஏற்றாய்
அதில் முழு மனத்துடன் உன்னை இணைத்தாய்

தூண்டா மணி விளக்கும் கற்பூரமும்
உன் தூய பணிகளின் அடையாளம்
ஏழைகளின் உறவுகளின் சிரிப்பில்
இறைவனைக் கண்டவன் நீ

கடல் கடந்து கனடா வந்த பின்பும்
உன் கனவுகள் சிவ பூதவராயருடன் இருந்தன
சிவத் தொண்டன் பூதவராயருக்கு
மணி கொண்ட கோபுரமும் கட்டிவித்தாய்

ஐயாவின் வாழ்வின் முடிவும் கூட
மீண்டும் ஒரு பயணத்தின் ஆரம்பம்தான்
அதிகாலைக் கடன்முடித்து உணவருந்தி
எம்மோடு பேசி மகிழ்ந்து மருந்தும் உண்டு
சிறு தூக்கம் கொண்ட ஐயா
மீண்டும் மதியம் விழித் தெழுந்து
மனம் விரும்பி உணவுண்டு கழித்தபின்
இன்னொரு குட்டித்தூக்கம் தூங்கிவிட்டு
மாலை வருமுன்னே துயில் எழுந்து
தன் மனைவி மக்களோடு சேர்ந்து
தேனீர் அருந்திக், கதைபேசி மகிழ்ந்துவிட்டு
உறங்கச் சென்றார்
வழமை போல் இரவு உணவு
தயார் செய்தபின்
உணவுண்ண அழைத்தபோது எழுந்திராது
சத்தமின்றி நீழ்துயில் கொண்டிருந்தார்
15 நிமிடங்கள் முன் மனைவி மக்கள் பார்த்தபோது
சீரான சுவாசத்துடன் நித்திரையில் ஆழ்ந்திருந்தார்
மனைவியும் மருமகளும் அருகிருக்க
மரணம் எய்திப் பரமனடி சேர்ந்துவிட்டார்.

இவர் தாழ்வென்று ஒன்றும் அறியாதவர்
தன் மான உணர் வூறி வளர்ந்தவர்
ஊருக்கும் உதவிபல புரிந்த உத்தமர்
உன் மத்தம் கொண்ட உழைப்பாளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் வாழ்வுக்கும் விளக்கேற்றி வைத்தவர்
மண்ணொட்டி உயர்ந்த மானிடர்
மண்ணுக்கு வாய்த்த மைந்தன் நீ

சுண்ணாக பதியினில் அவதரித்து
மொன்றியல் மண்ணில் மரித்த
மானிடத்தின் நேசன் நீ
அன்னாரின் ஆத்மா இறைவன்
திருவடி நிழலில் சாந்திபெற
இறைவனைப் பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனைவி புலம்பல்

அன்பின் சுடராய் அமைதியாகத் தான் வாழ்ந்து
கனிவின் நிழலாய் காலமெல்லாம் உயர்ந்து
பண்பும் நேசமும் பழுதிலா பாசமும் தந்து - எனை
கண்ணும் மணியும் போல் காத்தவரே - சென்றதெங்கே !

என்னுயிரே எனை முன்னே ஏற்றதொரு நாயகனே
உன்னை நான் மறவேன் என்றோதியதை ஏன் மறந்தீர்.
தன்னையே எனக்காய்த் தந்து தரணி விட்டு நீங்கி
முன்னைப் பயன் விளைவால் முந்தித்தான் சென்றுவிட்டீர்.

நல்ல தவப் பயனாய் எனைச் சேர்ந்து வாழ்ந்தீரே
வல்ல நல்ல பிள்ளைகளை நலமாய்ப் பெற்றீரே!
சொல்ல முடியாத துன்பமதை திடீரென்று தந்து விட்டு
மெல்ல எமை விட்டு சென்றதெங்கே தலைவா.



## பிள்ளைகள் புலம்பல்

பார்தனில் பக்குவமாய் எமைப் பெற்றெடுத்து
குறையாரும் கூறாத வண்ணம் வளர்த்தெடுத்து
கல்வியொடு ஒழுக்கமும் நாளும் சொல்லித் தந்து
நற்புத்திரராய் ஊர்காண வைத்த எம் குடும்ப விளக்கே.

எல்லாக் கடமைகளும் எடுத்தாங்கே செய்து வைத்தீர்.
நல்லாக்கம் செய்தபடி நாமிங்கு வாழ்தல் கண்டீர்.
ஐயாவே நீங்கள் மகிழ்வடைய ஆறுதல் தரவே
எல்லா நாளும் இங்கு நாம் காத்திருப்போம்

கனடாவில் வாழ்ந்த கருத்தெல்லாம் எம்மில் வைத்து
மனமெலாம் மகிழ்ந்திடவே மட்டில்லா ஆனந்தமாக
நினைவெல்லாம் உங்களையே சுற்றிவர எமைவிட்டு
கனவாகவே வாழ்வை முடித்து விட்டு சென்றதெங்கே

அருமை ஐயாவே! என்று இனி உங்களைக் காண்போம்
பெருமை பெறவே அழகொழுக எமை வளர்த்தெடுத்தீர்.
இம்மையிலும் மறுமையிலும் பெறும் செல்வம் அமைத்தும்
செம்மையாய் நாம் வாழ செய்து விட்ட ஐயாவே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

மருமக்களே என்று வாயார அழைத்து எம்மை
தருவேன் என் மக்களை என்று தாரை வார்த்தளித்தீர்
கருமமே புரிந்து கண்ணியமாய் எமைக் காத்திட்டீர்
தருமத்தினைக் காத்து கடைசியிலே சென்றதெங்கே?

கடவுள் பக்தி கொண்டு கடமைகள் பல புரிந்து
திடமாய் எமக்கு புத்திமதிகள் தனைப் பொழிந்து
அனைத்து மக்களுக்கும் அன்பும் ஆதரவும்
- வழங்கி
அமரத்துவம் தான் அடைந்த எங்கள் ஆசைமாமா.

நல்லுரை வழங்கி நாம் நலமாய்
- வாழ வைத்தீர்
அறிவுரை தந்து நல்ல ஆசானாயும்
- விளங்கினீர்கள்
தெளிவான வாழ்வு தந்து அன்பு மழை
- பொழிந்தீர்கள்
முடிவாக இன்று முத்தியுலகு சென்று
- எமையே பிரிந்தீர்கள்.



## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தா என்று ஏங்குகின்றோம் நாமே
அன்போடு எங்களை அரவணைத்த
- தாத்தா தாத்தா
எம்மோடு விளையாடி அன்பைக் கொட்டி
எமக்கினிய உணவு தந்து
பாசமுடன் எம்மை அரவணைத்து மகிழ்ந்து
- ஆடை அணிவித்து
பொன் பூத்த முகத்தினிலே கொஞ்சிக் கொஞ்சிப்
- புதுக்கதைகள்
என்றென்றும் கூறியே அரு மருந்தாய்
- தான் விளங்கி
வான் வழியே சென்று வைகுந்தம்
- சேர்ந்தனையோ தாத்தா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழவைத்த தெய்வம் எங்கள் ஐயா

அகாலத்தில் தொலைபேசி மணியொலித்தது. மறுமுனையில் இருந்து கிடைத்த செய்தி அதிர்ச்சியில் உறைய வைத்தது. நம்பவே முடியவில்லை. நேற்று வரை கதைத்துச் சிரித்த ஐயா அமரத்துவம் அடைந்து விட்டார் என்றால் எப்படித்தான் நம்ப முடியும்? அது பொய்யாகாதா என மனம் அங்கலாய்த்தது.

'பிள்ளை... மருமோன்... பேரப்பிள்ளையள்...' என்று அலகொழுக அன்போடு அழைத்த ஐயாவின் குரல் ஓய்ந்துதான் போனது. பாசம் பொங்கும் அவரது வார்த்தைகளை இனிக் கேட்க முடியாது. உற்றார், உறவினர்களை விசாரித்து அவர்களது சுகதுக்கங்களைக் கேட்கும் அவரது ஆத்மாவை இனித் தரிசிக்க முடியாது. கடைசிவரை ஓயாதுழைத்தவர். உழைத்த பணத்தில் தானும் வாழ்ந்து எம்மையும் வாழ வைத்து தானதருமங்களும் செய்தவர். யாரோடும் பகைமை பாராட்டாமல் வாழ்ந்தவர். யாருக்கும் கரைச்சல் தர விரும்பாதவர். எந்த அவஸ்தையுமின்றி, எந்தச் சலனமும் இன்றி விழி மூடினாரே!

ஐயா! உங்கள் அருகிருந்து கவனிக்கும் பாக்கியமற்றுப் போனோமே! அதுதான் பெருங் கவலையாய் அழுத்துகிறது. நாங்கள் நன்றாக வாழ நீங்கள் ஓயாது உழைத்தீர்கள். இன்றோ எங்களை கண்ணீரில் கரைய வைத்து மேலுலகு சென்று விட்டீர்கள். போய் வாருங்கள் ஐயா! விடை தருகின்றோம். ஆற்றொணாத் துயரெனினும் எங்கள் இதயத்தில் வாழ்கிறீர்கள். என்றும் வாழ்வீர்கள். ஆதலால் போய் வாருங்கள் ஐயா! சிவபூதராயப் பெருமானதும், இலகடி வைரவப் பெருமானதும் திருவடிநிழலில் இளைப்பாறப் பிரார்த்திக்கிறோம்.

மகள் : செல்வராணி (மகள்)
தியாகலிங்கம் (மருமகன்)
(தலைவர், கமக்காரர் அமைப்புக்களின் அதிகார சபை, யாழ்.மாவட்டம்)
தாரணன், தாருஜன், சோபிதா (பேரப்பிள்ளைகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தானம்
# Sri Siva Pootharayar Thevasthanam

பதிவு இல : HA/5/JA/477 பதிவு திகதி : 18-08-1980

Chunnakam South,
Chunnakam,

**Hatton National Bank, Chunnakam.**
***Acc.No : 117010004196***

சுன்னாகம் தெற்கு.
சுன்னாகம்.

05./0../201.

தலைவர் / President
பொருளாளர் / Treasurer
செயலாளர் / Secretary

திருமதி குலமணிதேவி இராசையா,

கனடா.

### ஆழ்ந்த அஞ்சலிகள்

திருவாளர் சின்னத்தம்பி இராசையா அவர்கள் எமது ஆலயத்தின் தொண்டராக சிறுவயது முதலே செயற்பட்டவர். ஆலயத்துக்கென நியமிக்கப்பட்ட முதலாவது தர்மகர்த்தா சபையில் உறுப்பினராக இணைந்து கொண்ட அவர் தொடர்ந்து பல வருடங்களாக உறுப்பினர் பதவியை அலங்கரித்ததுடன் ஆலயத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வந்துள்ளார்.

அத்துடன் அவர் கனடாவுக்கு புலம் பெயரும் வரை வெள்ளிக் கிழமைகளில் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனைகளில் தவறாது கலந்து கொள்பவர். மேலும் ஆலய அலங்கார உற்சவம், திருவெம்பாவை, நவராத்திரி பூசைகளிலும் கலந்து கொண்டு சரியைத் தொண்டு இயற்றுபவராக இருந்துள்ளார். ஆலயத்தின் நவராத்திரி 6ஆம் பூசை மற்றும் திருவெம்பாவை 6ஆம் பூசை ஆகியவற்றின் உபயகாரராகவும் அவர் இருந்து வந்துள்ளார்.

ஆலயத்துக்கு அழகும் பொலிவும் சேர்க்கும் மணிக் கோபுரத்தையும், பின்பக்கச் சுற்றுக் கொட்டகையையும் அமைத்து அன்பளித்துள்ள இவர் வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியப் பெருமானின் எழுந்தருளி உற்சவ மூர்த்தியையும் உபகரித்துள்ளார். அத்துடன் தனது பிள்ளைகள் மூலமாக எலி மற்றும் மயில் வாகனங்களையும் உருவாக்கி அன்பளிக்கச் செய்துள்ளார். இதனால் ஆலயத்தில் கந்தசஷ்டி உற்சவத்தை ஆரம்பித்து சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணை புரிந்துள்ளார்.

அவரது இழப்பு எமது ஆலயத்துக்கும், கிராமத்துக்கும் பேரிழப்பாகும். மொட்டாக மலர்ந்து பூவாகி, காயாகி, கனியாகி உதிர்வது போன்றது மனித வாழ்க்கையாகும். பிறந்தவர் இறத்தல் உலக நியதி. அதை ஏற்று ஆறுதல் அடைவோமாக. அன்னாரின் ஆத்மா சிவபூதராயப் பெருமானின் பாத கமலங்களில் இளைப்பாறுவதாக. அன்னாரின் இழப்பின் துயரில் துவளும் குடும்பத்தாருடன் இணைந்து, அவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

செ. தங்கராசா ஜே.பி.
கௌரவ செயலாளர்
ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தானம்
சுன்னாகம் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவபூதராயப் பெருமானின் நல்லடியார்

எமது தந்தையார் அமரர் சோமசுந்தர சர்மா அவர்கள் சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் ஆலய நித்திய பூசைப் பணிகளைப் பொறுப்பேற்ற போது சிவபூதராயர் ஆலயத்தின் நிர்வாக சபை உறுப்பினராக அமரர் இராசையா அவர்கள் செயற்பட்டார். அவர் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தனது பாரியாருடன் ஆலயத்துக்கு வந்து சரியைத் தொண்டுகளை ஆற்றுவார். அத்துடன் நடைபெறும் கூட்டுப் பிரார்த்தனையிலும் அவர் கலந்து கொண்டு திருமுறைகளை ஓதுவார். நவராத்திரி பூசையில் 'கன்னித் திங்கள் வருகுது ஐயா கருத்துடன் நவராத்திரிக்கு' என்ற பாடலை பெருங்குரலில் அவர் பாடக் கேட்டது இன்றும் நினைவில் ஒலிக்கிறது.

சிவபூதராயப் பெருமான் மீது மிகுந்த பக்தியுடையவராக விளங்கிய அமரர் சின்னத்தம்பி இராசையா அவர்கள் கூட்டுப் பிரார்த்தனை, நவராத்திரி, திருவெம்பாவை உபயங்களையும் சிறப்பாகச் செய்துள்ளார். அத்துடன் ஆலயத்தின் பல்வேறு திருப்பணிகளுக்கும் அவர் பெரிதும் பங்களித்துள்ளார். ஆலயத்தின் தோற்றப் பொலிவுக்குக் கட்டியம் கூறும் மணிக் கோபுரம் அதற்குச் சான்றாகும்.

ஆலய அந்தணப் பெருமக்களோடு நல்லுறவைப் பேணி, அவர்களுக்கு உதவிகள், ஒத்தாசைகள் செய்பவராகவும் அவர் விளங்கியுள்ளார். ஏனைய அடியார்களுடனும் அவர் அன்போடு பழகுபவராக இருந்துள்ளார். 'பணிவுடையன் இன் சொல்னாதல் ஒருவர்க்கு அணியல்ல மற்றுப்பிற' என்றார் வள்ளுவப் பெருந்தகை. இன்சொல் பேசுகின்ற ஒருவருக்கு அதைவிட வேறு அணிகலன்கள் தேவையில்லை என்பது இதன் பொருளாகும். அமரர் இராசையா அவர்களும் இன்சொல் என்ற அணிகலனையுடையவராக விளங்கினார் எனில் மிகையல்ல.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை. அன்னாரின் ஆத்மா சிவபூதராயப் பெருமானது பாதார விந்தங்களில் அமைதி பெறப் பிரார்த்திக்கிறோம். அன்னாரின் இழப்பின் துயரால் துவண்டு போயிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பிரம்மஸ்ரீ சோ. தீபதர்சன சர்மா,
ஆலய நித்திய பூசகர், ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தானம்,
சுன்னாகம் தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவில் நீங்கா, ராசையா அண்ணா

சுன்னாகம் தெற்கின் ஒரு பெருமகனார் எம்மை விட்டுப்பிரிந்து விட்டார். சிறப்பாக வாழ்ந்ததால் எல்லோருடைய மனதிலும் இடம் பிடித்தவர்.

1988ம் ஆண்டு அவரது புதல்வர் நடராஜா எனது துணைவியின் சிறிய தாயார் மகளைத் திருமணம் செய்ததால் எமது உறவு நெருக்கமானது.

விவசாயக் குடும்பத்தில் பிறந்து, சிறுவயதில் தந்தையை இழந்து, விடா முயற்சியால் முன்னேறியவர். தாயின் அரவணைப்பில் வளர்ந்தவர்.

கம்பீரமான தோற்றமும், தெளிவான சிந்தனையும், சுமுகமாகப் பழகும் இயல்பும், சிறப்பான வாழ்வைப் பெற்றுக்கொடுத்தது.

சுன்னாகம் தெற்கு சிவபூதராயர் மீது தீவிர பக்தி கொண்டவர். ஆலயத்திற்கு நிறையத் திருப்பணிகளைச் செய்துள்ளார். இறுதிக் காலத்தில் பிள்ளைகளுடன் கனடா நாட்டில் இருந்தபோதும், தனது ஊர் ஆலயம், உறவினர், நண்பர்கள் பற்றியே பேசிச் சிந்திப்பார்.

இலங்கை வந்து சிவபூதராயரை வணங்கி, உற்றார் உறவினர்களுடன் பழகிச் செல்லவேண்டும் என்ற அவா சுகவீனம் காரணமாக நிறைவேறவில்லை.

பிள்ளைகள் கனடா நாட்டிலும், இளைய மகள் சுன்னாகத்திலும் சிறப்பாக வாழ்கின்றனர்.

அண்ணாவின் வாழ்வு நிறைவான வாழ்வு. எமது மிகவும் அன்புக்குரியவரை இழந்து துயர் அடைகின்றோம்.

அவரின் குடும்பத்தவர்க்கு எமது அனுதாபங்கள்.

அண்ணாவின் ஆத்மா சாந்தி அடைவதாக.

இப்படிக்கு,
உறவினர்,
எஸ். பீ. சிவஞானம்.
சட்டத்தரணி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயரோடும் புகழோடும் வாழ்ந்த பேரன்

பேரன் மாமா என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்பட்டு வந்த சின்னத்தம்பி இராசையா அவர்கள் இறைபதமடைந்த செய்தி எம்மெல்லோரையும் துயருள் ஆழ்த்தியது. அமரர் இராசையா அவர்களை நான் 1975ஆம் ஆண்டு முதல் அறிவேன். அவர் சுன்னாகம் தெற்கில் பிரபல்யம் வாய்ந்த ஒருவராக விளங்கியவர். தனது சுயமுயற்சியால் வாழ்வில் உயர்வு பெற்றவர். ஊரில் சிறு பணக்காரனாகத் திகழ்ந்த இவர் தனது குடும்பம் பிள்ளைகள் எல்லோரையும் நன்கு வாழ்வதற்கு வழிவகுத்ததுடன் சிறந்த வழிகாட்டியாகவும் விளங்கியவர். சிறந்த சமூக சேவையாளராகவும் திகழ்ந்தவர். குறிப்பாக கிராமத்தில் வாழ்ந்த விவசாயிகளுக்கு பணத் தேவைகள் ஏற்பட்ட வேளைகளில் கடன் வழங்கி, அவர்களை விவசாய உற்பத்தியில் தடையின்றி ஈடுபடச் செய்து அறுவடைக் காலத்தில் மீளப் பெற்றுக் கொள்ளும் முறையில் உதவி செய்து வந்தவர். இவருடைய இந்தச் சேவை வங்கிச் செயற்பாடு, வங்கிப் பழக்கவழக்கங்கள் குறைவாகக் காணப்பட்ட காலத்தில் இவ்வூர் மக்களுக்குப் பேருதவியாக அமைந்ததெனக் கூறலாம்.

சுன்னாகம் தெற்கில் பழமை வாய்ந்த சிவபூதராயப் பெருமான் ஆலயம் அமைந்துள்ளது. இவ்வாலயப் பெருமான் மீது சிறு பராயத்தில் இருந்தே பக்திபூர்வமான ஈடுபாடு உடையவராக இருந்து வந்த இவர் திருமுறைகள் ஓதுவதிலும் ஆர்வலராகக் காணப்பட்டவர். ஆலயத்திற்கான திருப்பணிகள் பலவற்றைத் தனது குடும்பத்தின் பெயரால் செய்துள்ளார். குறிப்பாகக் கூறுவதாயின் ஆலயத்தின் மணிக்கூட்டுக் கோபுரத்தைக் கட்டுவித்து ஆலய மணியையும் பொருத்தி, ஊரெங்கும் மணியோசை கேட்கச் செய்ததுடன் ஊர் சிறக்கவும் வழி செய்தவர். 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற புனருத்தாரண வேலைகளின் போதும் சுற்றுக் கொட்டகை அமைப்பதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் கொண்டிருந்த கடவுள் பக்தி, நல்லுள்ளம், சமூகப்பணி என்பனவற்றால் இவரது குடும்ப வாழ்க்கை, பிள்ளைகளின் வாழ்க்கை யாவும் சிறப்புப் பெற்றுள்ளன என்றால் மிகையாகாது.

இவரது இறுதிக் கால வாழ்க்கை ஓய்வாக அமையத்தக்கதாக பிள்ளைகளுடன் கனடாவில் வாழும் வாய்ப்பினைப் பெற்றிருந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுலகில் பிறந்தவர் என்றோவொரு நாள் இறப்பது நிச்சயம் என்பதற்கமைய அமரர் இராசையா அவர்களும் இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்து இறைபத மடைந்துள்ளார். இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் உற்றார், உறவி-னர்களுக்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

பொ. கமலநாதன்,
(இளைப்பாறிய அதிபர்)
பொருளாளர்,
பூதராயர் ஆலய தர்மகர்த்தா சபை,
சுன்னாகம் தெற்கு.

## உழைப்பால் உயர்ந்த பெருமனிதர்

இராசையா மாமா கிராமத்துப் புழுதி வாசனை நுகர்ந்து வாழ்ந்த மனிதர். கொடுகும் பனியில் மரங்கள் விறைத்துச் சிலிர்த்திருக்கும் அதிகாலைப் பொழுதில் எழுந்து, துலா மிதித்து, பட்டையில் நீரள்ளி, பயிர்களுக்கு நீர் பாய்ச்சிய விவசாயி. பழந்தண்ணியும், குரக்கன் பிட்டும், மரவள்ளிக் கிழங்குக் கறியும், ஒடியற் கூழும் உண்டு உரமேறிய உடலுக்கும், புராண படனமும், காத்தவராயன் கூத்தும், வாண வேடிக்கையும், மேளக் கச்சேரியும், கதாப் பிரசங்கமும், களியாட்டமும் எனத் திளைத்த மனதுக்கும் சொந்தக்காரர். நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்த முயற்சியாளன்.

சிறுவயதிலேயே தந்தையை இழந்து, தாயின் அரவணைப்பில் வளர்ந்து 'பேர் சொல்லும் பிள்ளையாக' பேர் அன்ன வாழ்ந்தவர். அதனால் பேரன் இராசையா என்ற செல்லப் பெயர் பூண்டவர். மற்றவர்களுடன் நல்லுறவைப் பேணி, அவர்களது சுகதுக்கங்களில் கலந்து, தேவைப்படும் உதவிகளை வழங்கி, தானும் உயர்ந்து மற்றவர்களது உயர்வுக்கும் காலானவர்.

பிள்ளைகளோடு இணைந்திருக்கக் கனடா சென்றாலும் வேரறா நினைவுகளுடன் அவர் வாழ்ந்தார். ஊரிலுள்ள உறவுகளின் சுகதுக்கங்கள் என்றால் கடித மூலமோ, தொலைபேசி மூலமோ தொடர்பு கொள்வார். தேவையான உதவிகளைச் செய்வார். தனது வருமானத்தில் ஒரு பகுதியை ஊர்க்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோவில்களுக்கு வழங்கியிருக்கிறார். சிவபூதராயர் ஆலயத்தின் மணிக் கோபுரம் இவரது நினைவைச் சொல்லி நிமிர்ந்து நிற்கிறது.

இராசையா மாமா எங்களுடன் மிகுந்த அன்போடும், ஆதரவோடும் இருந்துள்ளார். எமது சிறு பராயக் காலம் அவர்களது வீட்டிலேயே அதிகம் கழிந்திருக்கிறது. எங்களை எப்போதும் வாஞ்சையோடு அரவணைத்த பெருமகன் அவர். அவரது பிரிவு பெருந்துயர் தருகிறது. தோன்றலும் மறைதலுமாகிய உலகியல் உண்மை அவரை எம்மிடமிருந்து பிரித்து விட்டது. அந்த நியதியை அனைவரும் ஏற்கத்தான் வேண்டும். அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கிறேன். அவரது இழப்பின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

சு. ஸ்ரீகுமரன்
B.A.,Dip.in.Ed.,Spl.Trd.,M.Ed.
பிரதிக் கல்விப் பணிப்பாளர்

## Our grandfather

Our grandfather was someone who could easily put a smile on our faces. He was always the one to entertain us, whether it was playing ball with us or taking us to the park when we were younger. He made sure we enjoyed our stay and it was very clear that he was a caring and loving man. The memories that we both treasure will be the good times we had with our grandfather. We would like to thank him for being a kind hearted human being. You will surely be missed by your loved ones but always remembered.

Sureka Rasiah & Sutharshan Rasiah

## நட்பு

அன்பும் பண்பும் நிறைந்த நண்பனே !
திடீரென மறைந்தனையே
இனி எப்ப திரும்புவீரோ
நட்புக்கு இகக்கணமானவரே

ஆத்மா சாந்திபெற
இறைவனின் தாள்கள் பணிந்திடுவோம்

மொன்றியல் நண்பன்,
க. சுப்பிரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To Our Loving Grandfather,

It was in 1994, a mere twenty-one years ago that our grandfather stepped foot into a whole new country - a place that he would call home. The eldest of us was only four at the time, but was well aware that a new family member was being welcomed - by migration that is.

Our grandfather was agile, had strength and mobility - which led him to act independently from the time he arrived in Canada. When we were young, we knew that our grandfather lived on his own; with our grandmother. On occasion, we would visit him at his home - but it was his visits to our home that outnumbered. In the spring, summer and autumn months, he would come by our home; often it was daily - as we all lived in close proximity to each other.

He would sometimes come over to watch us, while our mother or father partook in their business affairs - it was one of the ways we got to know him better. Our grandmother suffered a stroke in 1997 - and even during this period of time, he stayed strong and maintained his livelihood. He would still continue his daily routine without any mishaps and come visit us when time permitted.

As young and healthy as we were, we were not able to adhere to his morning routine. Before we would wake up in the morning, he would have completed the bulk of his morning and mid-day tasks. Just as we would begin to have breakfast, he would have already showered, cooked the midday meal, walked a few laps around the nearby track & field court and be back at home.

Cote-des-Neiges was where we all lived at the time and for him - it must have been like a small town in his homeland. He knew of people, places, landmarks, temples and churches and got around - without anyone's help. In essence, he knew these areas like the back of his hand.

The neighborhood was home to an iconic shopping complex, where our father owned a business. When we would visit our fathers' business or go to the shopping complex - we would always see our grandfather, sitting on one of the wooden



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

benches by the Canadian Tire store. We always saw him there because we knew he would be there - everything he did was planned and timed.

As he always stuck to his schedule, everyone knew where to find him at every hour of the day. Whether it was at the local shopping complex, park or at home - we knew exactly when he would be there.

However, as the years progressed, we became older and so did he - but simultaneously, he had begun to lose his sense of agility. Despite the lack of energy, he still continued to visit us and the other families and even take care of his own needs. Our mother would cook for him and our grandmother, and we would bring it over.

One of us along with our dad began making frequent visits to the local hospital along with our grandfather. It was 2008 when our grandfather became diagnosed with a bladder cancer that required weekly visits to the hospital. The eldest of us would accompany our father along with our grandfather. The receptionist at the hospital would quip about how all three generations were present - they found it to be a pleasant sight.

Our frequent visits to the hospital soon turned into several days and nights at the hospital. Our father was the one who had spent countless days and nights with him - tending to his needs along with the clinical professionals. We would visit to fill the void in his days at the hospital.

It was during the car rides to the hospital when our grandfather would openly talk with our dad. He would ask for help if it was needed - usually it was something along the lines of "head to the pharmacy before dropping me off, I'd like to pick up a few meds" or sometimes about something he had heard that week.

His condition worsened over the 7 years following the diagnosis and he realized it wasn't getting better, but he still remained hopeful. On occasion, he would talk to us about how he should be healthier and often times; he would compare himself to a lad whose sixty-some years younger.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

It was becoming an incredible burden on our grandfather to take care of himself, so along with him, we decided to have him and our grandmother move in with us. He preferred the middle child in our family, as our grandfather would always ask about him. When we would be out of the home on our personal affairs, our mother spent most of the day with him.

As you've already learned, our grandfather was a man with strict adherence to his schedule, who tended to his basic necessities in a timely and orderly manner - which has helped him live for so long. We are blessed with the opportunity to have spent two very close years with him, as he struggled with his uncomforting medical conditions.

Despite his reduced mobility and physical condition, he made it a priority to stay in touch with those he cared about - regardless of whether they were family or not. Everyone would agree that he was someone who not only loved to talk, but listen and advise - as he would do with us.

In spite of his preference to be independent, we've been more than happy to have given back to him through our help over his last few years and we can be certain that he is now in a better place.

Your Loving Grandchildren,
Kirushanth, Thanusan and Sivashanth

## To My Father with Love,

Something's will always be the same, I will cherish you forever. Good solid things like honesty, and trust and caring about people. It's qualities like these that keep us aware of who we are and what we give to everyone. It's qualities like these, Father, that you've taught me to value through your influence, your example, and your love. It had made me appreciate you more. I am very lucky to have you as my father and I am grateful to be the daughter of a great man.

Your loving Daughter,
Pathminithevy Rasiah
(Montreal)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## To Our Loving Grandfather,

There are moments in life we wish we could bring someone back and this is one of them. Just to spend the day with you one more time, to give us a few more good memories. One more chance to say Thank You and We Love You.



From
Your loving Grandchildren
Navaneethan, Luxana, Ladchan
(Montreal)

## Our Dearest Grandfather,

We miss you grandpa. You've left us, leaving us sad. We deeply miss you. Whenever you would see us, you would smile and be cheerful - we loved that about you. You always helped us and you were always kind to us. We only wish you were here with us, right now. We will forever miss you grandpa.



Your Loving Grandsons,
Thiva Pathmanathan
Ashwien Pathmanathan
Thishan Pathmanathan
(Montreal)

## Rasiah Mama


Out of my Amma's cousins, Rasiah mama is our most favourite> due to his loving and caring attitude throughout his life. While he was in Sri Lanka he used to visit us every 2 weeks. On some visits, he brought us parcels of Mutton fry wrapped in banana leaf. During his visit he takes breakfast with our ammah and appah while we went off to school.

I reminisce a memory when Periappah died and Ammah and appah had to leave Jaffna to Colombo for the funeral. During this time> Rasiah mama cycled from Chunnakam to Brown road every night to take care of us till morning. He then left back to Chunnakam at early morning 5 a.m to irrigate his farms.

Rasiah mama's act of humanity has no bounds. Once my




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ammah was severely ill. On knowing this, he brought his ammah to stay with us and look after us. During her stay, Rasiah mama's amma, she use to pound the paku and betel leaves using a mortar and pestle after each meal of hers. It was such a big surprise, as it was our first experience hearing the mortar and pestle, also to say the taste of the betel mixture was a blast of taste buds.I can recall many ever- lasting memories that I will cherish of Rasiah mama forever.

He is what I call the true embodiment of love and strength. Finally I felt really overwhelmed with sadness about the most recent memory just before Rasiah mama's death.Around 10 days ago before Raisah mama's death I happened to talk with him.

We decided to meet up in June and he told me "VAA NALLADHU". That was the last thing I heard from him. Hope his younger generation will continue his attitude and love !

Sumathy Moorthy
(Thanakularayan)

Dearest Machan,

We in Singapore are in shock and tears at your sudden passing. When we received the call that you had left all of us, we could not stop crying. It was especially shocking as we had just spoken to you two days earlier. You had sounded your cheerful self, though slightly tired.

Appa and amma always held you in high regard. Appa always spoke about you and your mom, who was his sister, whom he loved very much. Not surprisingly, you were his favourite nephew. He told us how very like your mom you were - in caring and helping everyone. The elder two among us remember how you used to play with us and bring us sweets and gifts, and the stories you told us when we were young children in Ceylon. But our other memories are not that clear as we were only five and six years old then.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

After we came to Singapore with mom to join our father, our contact with you was mainly through letters and the occasional trunk calls. Later when you moved to Canada, appa and you would speak on the phone weekly, and on occasion, even daily. Perhaps if Skype was available then, we all could have seen you as well. But even though we could not see each other, the strong bonds were still there.

Appa and amma often told us many instances of your help and care. They told us how when Appa was working in Singapore, how you used to cycle from your home, which was quite a distance, to see how amma, her younger brothers and sisters (our uncles and aunts), and three of us small children, were faring and to buy vegetables and provisions from the santhai (market) which was only held weekly in the town. And of course there were lollies and sweets for the elder two of us.

We, especially appa, were overjoyed when you and Machaal came to Singapore in 2005. Amma would have been equally happy, but sadly she did not leave to see you in person. But that one visit is etched deep in our hearts. That's also when you met all six children in person. The six days you spent with us and the times we spent are precious memories locked in our hearts forever. Appa in particular, was over the moon, in meeting you after so many years.

How Appa and you travelled down memory lane. It was as if the several decades that had separated you two had never happened. Of course you remembered us elder two. But Thevi, who was just a baby, was all grown up. And for the first time you met the younger three - brother Paranjothi, and sisters Saraswathi and Thangam. We recall your chuckles when you told us how we had accompanied you when you delivered your wedding invitation to relatives and the little pranks that we did. Oh, how many sweet memories you shared!

When Appa, brother Paranjothi and Thevi passed away, one after the other within a span of six years, you always called us, almost daily in the first few weeks, to console and comfort us and encourage us to remain strong. You will never know how much strength and solace your calls made or what just hearing your voice meant to us. You told us to be tough, to take care


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

of each other, to eat healthily, and be there for one another.

Your confidence, your positive outlook on life, your courage in starting a new life in a totally alien country, where the weather was far from the tropical climate you had grown up and lived almost your entire life, are testimony to your endurance and life philosophy. Not once did we hear you lament or feel sorry for yourself, even in your last few years when you became unwell. Such was your fortitude.

Oh, how you loved your adopted country and harsh winters notwithstanding. You will tell us all about the malls and the walks in the park, the bus trips and your chats with friends from Ceylon who had also migrated there.

When we made our weekly calls, it would be 7am in Canada. By then you would have had your bath and completed your prayers. And when you picked up the call, you would recognize immediately which one of us was calling you, just from our voice.

It is with heavy hearts that we Karthigesu (Thuraiappa) children bid you farewell. Machaal who has been with you all these years, will miss you dearly. You were her anchor and her strength. We pray and hope that she will find peace and comfort in remembering the good times.

Machaan, who will call us "pillai" in that uniquely robust and cheerful manner? We know we will continue to miss you, our long distance conversations, your laughter, your sense of humour and your wisdom. Machan, you are forever etched in our hearts, together with the memories of our parents.

Anbudan,
KARTHIGESU children,
Arunthathi, Sulosana, Saraswathi, Thangam
(Singapore)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் ஐயாவின் எனது நினைவு பதிவுகள்

1927 ஆம் ஆண்டு பதினைந்தாம் நாள் மார்கழி குளிர் மாதம் சின்னத்தம்பி பொன்னுப்பிள்ளை இருவருக்கும் ஏகபுத்திரனாக அவதரித்தார். சிறு மாதங்களில் தந்தையை இழந்தார் தாயார் அரவணைப்பிலும் பேரனார் ஆறுமுகம் இராமாசிபிள்ளை மாமனார்கள் அரவணைப்போடு வளர்ந்து பாடசாலை கல்வியை முடித்து பதினெழு வயதில் விவசாய தொழிலை தொடங்கினார். கடவுள் பக்தி மிக அதிகம்
அவர் எதை தொட்டாலும் அது துலங்கும் என்று சொல்லுவார்கள். அதற்கு அமைவாக விவசாயம் மேம்பட்டது எந்த பயிர் வைத்தாலும் நல்ல விளைச்சலை கொடுக்கும். நல்ல வருமானத்தை ஈட்டி கொடுத்தது இதன் மூலம் பல பேருக்கு உதவிகளை செய்து பலபேரின் வாழ்க்கைக்கு ஒளிஏற்றபட்டது. இப்பொழுது அவர் திருமண வயதை அடைந்ததும் சொந்த மாமனார் பொன்னையா மாமாவின் மூத்த மகள் குலமணிதேவியை 1956ஆம் ஆண்டு கரம் பற்றினார் வாழ்க்கை ஒளிமயமானது. 1957ஆம் ஆண்டு முதலாவது புத்திரன் நடராஜா, 1960 ஆம் ஆண்டு இரண்டாவது புத்திரன் இரவீந்திரன், 1963 ஆம் ஆண்டு மூன்றாவது புத்திரி பத்மினிதேவி, 1965 ஆம் ஆண்டு நான்காவது புத்திரன் பத்மநாதன், 1968 ஆம் ஆண்டு ஐந்தாவது புத்திரி செல்வராணியுமாக நாங்கள் ஐவர் பிள்ளைகளாக அவதரித்தோம். எல்லோருக்கும் கல்வியை கொடுக்க வேண்டும் என்று கடும் முயற்சி செய்தார்.

எந்த குறையும் வைக்காமல் பிள்ளைகள் படிக்கும் வரை படிப்பித்தார். ஒரு நிமிடமும் வீணே கழிக்க மாட்டார். கடின முயற்சி அவரை வசதி படைத்த ஒருவராக வாழவைத்தது இதன் மூலம் பல பேர் பயன் பெற்றார்கள். எங்களுக்கு உடல் நலகுறைவு ஏதும் சுகயீனம் என்றால் தனது வேலைகளை நிறுத்தி விட்டு மருத்துவரிடம் கூட்டி சென்று மருந்து எடுத்து தந்து நன்றாக கவனித்து கொள்ளுவார் சிலவேளை மருத்துவரை வீட்டுக்கு கூட்டி வந்திடுவார் எதிலும் எங்களுக்கு குறை வைக்காமல் பாதுகாத்து வளர்த்தார்கள் அம்மாவும் ஐயாவும். எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது நான் மெல்லியதாக இருக்கிறேன் என்று தோட்டத்திற்கு கூட்டி சென்று அதிகாலை பசுவில் பால் கறந்து அந்த சூட்டுடன் பால் குடிக்க தந்தது நினைவு இருக்கிறது. இந்த மாதிரி எங்களை வளத்தார்கள் இன்று நினைத்து பார்க்கிறோம் அந்த காலத்தை. இப்படி ஈழத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் காலம் சிறப்பாக வாழ்ந்து பிள்ளைகள் எல்லோருக்கும் திருமணங்களையும் நடாத்தி வைத்து இன்று பதின் நான்கு பேரப்பிள்ளைகளும் ஒரு பூட்டப்பிள்ளையும் இருக்கிறார்கள். 1994 ஆம் ஆண்டு அம்மாவும் ஐயாவும் கனடாவிற்கு எனது ஸ்பொன்சர் மூலம் வந்து எங்களுடன் இருந்தார்கள்.

ஐயாவின் குறிக்கோள் ஆருக்கும் பாரமாக இருக்க கூடாது இதற்கு அமைய 1995 ஆம் ஆண்டு முதல் இருவரும் தனியாக இருந்தார்கள். 2013 ஆம் ஆண்டு ஆனி மாதம் தொடக்கம் மீண்டும் எங்களுடன் வந்து இருந்தார்கள். 2008 ஆம் ஆண்டு ஐயாவிற்கு சுகவீனம் ஏற்பட்டது ஐயாவின் மருத்துவம் சம்மந்தமாக கவனித்து வந்தேன். 2014ஆம் ஆண்டு ஆனி மாதம் இரவு 8மணி வீட்டில் விழுந்துவிட்டார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அவரது தொடை எலும்பில் உடைந்து விட்டது என்று மருத்துவர்கள் சொன்னார்கள். சத்திரசிகிச்சை மூலம் உடைந்த எலும்பை பொருத்தினார்கள். அதன் பின் சுயமாக நடக்க முடியாது ஊண்டுகோல் உதவியுடன் நடப்பார். இரண்டு மாதங்கள் மரத்துவமனையில் இருந்தவர் ஐயா எனது வேலைகளை நிறுத்தி விட்டு இரவும் பகலுமாக பராமரித்து வீட்டுக்கு கூட்டி வந்தேன் நன்றாக இருந்தார்.

தான் சிறப்பாக வாழ்ந்தது போல் பிள்ளைகளையும் சிறப்பாக வாழவைக்க வேண்டும் என்பதனால் தன்னிடம் இருந்த பணம் பொருள் எல்லாவற்றையும் தான் இருக்கும் போது எப்படி கொடுக்க வேண்டுமோ அப்படி கொடுத்துவிட்டார். எந்த குறையும் விட்டுவைக்கவில்லை (தங்களின் இறுதி செலவுக்கும் பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டுதான் சென்றார் இறக்கின்ற வரை தன்கையினால் எல்லாம் செய்தார் இறந்த பின்னரும் தனக்கு பிள்ளைகளின் பணத்தில் எதுவும் செய்ய கூடாது என்ற குறிக்கோளுடன் வாழ்ந்தவர் ஆருக்கும் கஸ்டம் கொடுக்க கூடாது என்ற எண்ணம் அவரிடம் மேலோங்கி இருந்தது. மரணிக்கும் நேரம்வரை தன் வேலைகளை தானே செய்தார் அன்றும் அதிகாலை முகம் கழுவி காலை தேனீர் உணவு மருந்து பின்னர் குட்டி தூக்கம். மதியம் உணவு முடித்து இருந்துவிட்டு சிறு குட்டி தூக்கத்திற்கு சென்று மீண்டும் மாலை தேனீர் அருந்தி பின்னர் நித்திரைக்கு சென்றார். இரவு உணவு தயார் செய்து விட்டு எனது மனைவியார் சொல்லுகிறா உணவு தயார் எடுத்து வருகிறேன் என்று அப்பொழுது ஐயா நித்திரையில் இருக்கிறார் மூச்சு இருக்கிறது. அம்மாவின் உணவை கொடுத்து விட்டு அப்பப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்கும் உணவு தயார் கொண்டுவருகிறேன் என்று சொல்லும் போது எதுவும் போசாது ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பது போல இருக்கிறார் கத்தி கூப்பிட்டு பார்த்தோம் முடியவில்லை அவசர மருத்துவ துறையினருக்கு தொடர்பு கொண்டோம் ஐந்தே நிமிடத்தில் இரு பிரிவுகளாக வந்தார்கள். பதினைந்து நிமிடம் வரை முயற்சி பண்ணினார்கள் பலன் இல்லை கூறுவதை கூறினார்கள் என்ன செய்வதென்று தெரிய வில்லை எல்லாம் முடிந்து விட்டது அதிர்ச்சியில் உறைந்தோம் கனவாக இருந்தது அவரின் விதியை இறைவன் எழுதிவிட்டான் காரிருள் நேரம் காலனவன் காத்திருந்து அணைத்துக் கொண்டான்.

18. 03. 2015 பதன்கிழமை கனடா நேரம் இரவு 9:20 மணிக்கு ஐயாவின் ஆத்மா இறைவன் திருவடிக்கு சென்று விட்டது. தாங்கொணா துயரம் அதிலிருந்து மீண்டும் எங்களை தயார் படுத்தி இறுதி நிகழ்வுகளை மேற் கொண்டு முறைப்படி இறுதி கிரிகைகள் நடாத்தி வழி அனுப்பினோம். இந்த இடத்தில் என் துணைவியை நினைத்து பார்கின்றேன் என் ஐயாவிற்கு வேண்டிய சகல தேவைகளும் மகளுக்கு மகளாக இருந்து வீட்டில் நிறைவேற்றினார். அந்தளவில் ஐயா சந்தோசமாக இருந்து சென்றார் என்ற ஒரு முழு நின்மதி இருக்கின்றது. ஐயா இருக்கும் வரை என்ன கேட்டாலும் வாங்கி கொடுப்பது வேறு சில விடையங்களில் அவர் என்ன முடிவு எடுத்தாலும் இன்றுவரை நான் எதுவும் சொல்வதில்லை அவர் சரியாகத்தான் முடிவு செய்வார் அவர் விருப்பத்தின்படி செய்து விடுவதுதான் எனது பணியாக இருந்தது. எங்களுடன் வந்திருந்த படியினால் அவரின் இறுதிக்காலம் எந்த தொல்லையும் இல்லாமல் நிறைவாக வாழ்ந்து கண் மூடினார்.

**ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி**

ஐயாவின் குல தெய்வங்களான இலகடி பைரவர் சிவ பூதவராயபெருமானின் பாதார விந்தங்களில் இழைப்பாற வேண்டி பிராத்திக்கின்றோம்.

என்றும் உங்களை மறவாத,
துணைவியார், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை,
• அன்பிற்குரிய மகன் இரா. நடராஜா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

தந்தையார், தாயார் உடன் பிறந்தார், தாரமார்
புத்திரராந் தாம்தாம் ஆரே
வந்தவா றெங்கனே போமாறேதோ மாயமாம்
இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ்மதியும் வாளரவம் திளைக்கும் செந்நீ
எந்தையார் திருநாமம் நமச்சிவாய
வென்றழுவார் இருவிகம்பில் இருக்கலாமே.

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலுங்காணேனே
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங்கொண்டென்னை
ஈசனவனெவ்வுயிர்க்கு மியல்பானான் சாழலோ.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்று அருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருத்தொண்டர் புராணம்
### சேக்கிழார்

உலகெலாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்,
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்



இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகிப் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிழையோனே கதிர்காமப் பெருமானே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 புராணத்திரட்டு



இறந்தார்க்கும் என்றும் இறவாதார்க்கும்,
இமையவர்க்கும் ஏகமாய் நின்று சென்று,
பிறந்தார்க்கும் என்றும் பிறவாதார்க்கும்
பெரியார் தம் பெருமையே பேச நின்று
மறந்தார் மனத்தென்றும் மறவார் போலும்
மறைகாட் டுறையும் மழுவாட் செல்வர்
புறந்தாள்சடைதாளப் பூதஞ்சூழப் புலியூர்
சிற்றம்பலமே புக்கார் தாமே

இருதலைக் கொள்ளியினுள் எறும்பொத்து நினைப்பிரிந்த
விரிதலையேனை விடுதிகண்டா யளிதேர் விளரி
யொலிநின்ற பூம்பொலி லுத்தரகோச மங்கைக்கரசே
பொருதலை மூவிலைவேல் வலனேந்திப் பொலிபவனே

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான் நிலாவி யிருப்பனென் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம் பலவனார்
வான் நிலாவி யிருக்கவும் வைப்பவரே

ஊசலாட்டுமிவ் வுடலுயிராயின விருவினை யறுத்தென்னை,
யோசையா லுணர்வார்க் குணர்வரியவ னுணர்வுதந்
தொளியாக்கிப், பாசமானவை பற்றறுத் துயர்ந்த
தன்பரம்பெருங் கருணையா, லாசை தீர்ந்தடியாரடிக்
கூட்டிய வற்புத மறியேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாழ் தொழ
காலனார் வெங்கொடுந்தூதர் பாசங் கொடென்

காலினார் தந்துடன் - கொடுபோக, காதலார்
மைந்தரும் தாயாராருஞ் சுடுங்கானமே பின்தொடர்ந்
தலறாமுன்; தூயதாழ் தண்டையுங் காண ஆர்வஞ்
செயுந் தோகைமேல் கொண்டுமுன் - வரவேணும்
ஆலகாலம்பரன் பாலதாகஞ்சிடுந் தேவர்வாழன்றுகந்
தமுதீயும் ஆரவாரஞ்செயும் வேலைமேல் கண்வளர்ந்
தாதியாமன்றனன் - மருகோனே சாலிசேர் சங்கினம்
வாவிசூழ் பங்கயஞ் சாரலார் செந்நிலம் - பதிவாழ்வே
தாவுஞ் சூரஞ்சிமுன் சாயவேகம்பெறும்
தாரை வேலுந்திடும் - பெருமாளே

குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த
## சகல கலாவல்லி மாலை



வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ ?
சகம் ஏழும் அளித்து
உண்டான் உறங்க ஒளித்தான் பித்
யாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே !
சகல கலாவல்லியே !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடும் பொருட்சுவை சொற்சுவை
    தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணிந்தருள்வாய்
    பங்கயாசனத்திற்
கூடும் படும்பொற் கொடியே!
    கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே!
    சகல கலாவல்லியே ! .2

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
    ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ
    உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
    கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாப மயிலே!
    சகல கலாவல்லியே ! .3

தூக்கும் பனுவல் துறைதோய்ந்த
    கல்வியும் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய் !
    வட நூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவில் நின்று
காக்கும் கருணைக் கடலே !
    சகல கலாவல்லியே ! .4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
    பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே?
    நெடுந் தாட் கமலத்து
அஞ்சத் துவசம் உயர்ந்தோன்
    செந்நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
    சகல கலாவல்லியே ! .5

பண்ணும் பரதமும் கல்வியும்
    தீஞ்சொற் பனுவலுயான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்காய்
    எழு தாமறையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சலக கலாவல்லியே ! .6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண் நல்காய்
உளங் கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே ! .7

சொல் விற்பனமும் அவதானமும்
கல்வி சொல்லவல்ல
நல் வித்தையுந் தந்தடிமை கொள்வாய் !
நளி னாசனஞ்சேர்
செல் விக்கரிதென் றொருகாலமுஞ்
சிதையாமை நல்கும்
கல்விப் பெருஞ் செல்வப்பேறே !
சகல கலாவல்லியே ! .8

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் ?
நிலந் தோய்புழக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோடு
அரசன்னம் நாணநடை
கற்கும் பாதாம்புயத் தாயே !
சகல கலாவல்லியே ! .9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்ட அளவிற்பணியச் செய்வாய் !
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பில் உன்போற்
கண்கண்ட தெய்வமுளதோ ?
சகல கலாவல்லியே ! .10


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகர் சுவாமிகள் அருளிச்செய்த

## திருப்புராணம்



நமச்சிவாய வாழ்க ! நாதன்றாள் வாழ்க !
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்கா தான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க !
ஆகமும் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க !
ஏகன் ஆநேகன் இறை வனடிவாழ்க !
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க !
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க !
புறத்தார்க்கச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க !
கரங்குவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க !
சிரங்கிவார் ஓங்கிவிக்குஞ் சீரோன்கழல் வெல்க !
ஈச னடி போற்றி ! எந்தை அடிபோற்றி !
தேசனடி போற்றி ! சிவன்சே வடிபோற்றி !
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி !
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி !
சீரார் பெருந்துறைநந் தேவன் அடிபோற்றி !
ஆராத இன்பம் அருளுமலை போற்றி !
சிவனவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாளே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொழியாய்
எண்ணிறைந் தெல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா(று) றொன்றறியேன் !
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைந்தேன் எம்பெருமான் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யேஉன் பொன்னடிகள் கணடின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்தில் ஓங்கார மாய்நின்ற
மெய்ய ! விமலா ! விடைப்பாக ! வேதங்கள் !
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே !
வெய்யாய் ! தணியாய் ! இயமான னாம்விமலா !
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்சுடரே !
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே !
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கு நல்லறிவே !
ஆக்கம் அளவிறுதி யில்லாய் ! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் ! சேயாய் ! நணியானே !
மாற்ற மனங்கழிய நின்றமறை யோனே !
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் !
நிறங்கள் சூர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த் தெங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா ! உனக்குக்
கலந்தசன் பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே !
மாசற்ற சோதி மலர்ந்த மலாலிச்சுடரே !
தேசனே ! தேனார் அமுதே ! சிவபுரனே !
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே !
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே !
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே !
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே !
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே !
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே !
அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே ! துன்னருளே ! தோன்றாப் பெருமானே !
ஆதியனே ! அந்த நடுவாகி அல்லானே !
ஈர்ததென்னை யாட் கொண்ட எந்தை பெருமானே !
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே !
போக்கும் வரவும் புணர்வுமில்லாப் புண்ணியனே !
காக்கம்எங் காவலனே ! காண்பரிய பேரொளியே !
அற்றின்ப வெள்ளமே ! அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தன் வெவ்வேறே வந்தறிவாய்
தேற்றனே ! தேற்றத் தெளிவே ! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே !
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனேயோ ! என்றென்று
போற்றப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டின்கு வந்து வினைப்பிறைவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டலிக்க வல்லானே !
நள்ளிருளில் நட்டம் பயின்றாடு நாதனே !
தில்லையுட் கூத்தனே ! தென்பாண்டி நாட்டானே !
அல்லல் பிறவி அறுப்பானே ! ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

## திருமந்திர

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்
சிவ சிவ என்னச் சிவகதி தானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிந்திக்க சில வரிகள்...!

* பிறர் செய்வதில், எது உனக்குப் பிடிக்கவில்லையோ அதை நீ மற்றவர்களுக்குச் செய்யாதே.
* நல்லதையோ, தீயதையோ எதை ஒருவன் செய்தாலும் அதன் விளைவுகள் அவனைத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.
* பணம் இல்லாவிட்டால் உன்னையாருக்கும் தெரியாது. பணம் இருந்தால் உன்னை உனக்கே தெரியாது.
* தோல்விகளைக் கொண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கிறது.
* சோம்பலின் விளைவு வறுமை, முயற்சியின் விளைவு மூலதனம்.
* நெற்றியை காயப்படுத்துவதை விட; முதுகை வளைத்துச் செல்வது நல்லது.
* விழுவது வெட்கமல்ல; வீழ்ந்து கிடப்பதே வெட்கமானது.
* அறிவு இல்லாத கண்ணியம் பலவீனமானது, பயனற்றது ஆனால் கண்ணியம் இல்லாத அறிவு ஆபத்தானது அஞ்சத்தக்கது.
* நல்ல அறிவு எந்த மூலையில் எவ்வளவு தூரத்தில் இருந்த போதிலும் அதைத் தேடிச்செல்.

## மூத்தோர் மொழிந்தவை...!

* பணமும் புகழும் உண்மையான செல்வம் அல்ல. ஒழுக்கமே உண்மையான செல்வம்.
 * ஜேம்ஸ் ஆலன்
* அறிவை விட தைரியத்தினால் தான் பெரியகாரியங்கள் சாதிக்கப்படுகின்றன
 * ஜேர்மன்
* சிறிய மெழுகுவர்த்தி எவ்வளவு தூரம் ஒளியைப் பரப்புகின்றதோ அதே போல் கெட்ட உலகத்திலே ஒரு நல்ல செயல் நன்கு பிரகாசிக்கும்
 * வில்லியம் ஷேக்ஸ்பியர்
* அறிவாளியின் கரங்களில் உள்ள எழுதுகோலானது போர் வீரனின் வீரவாளை விட மிகப் புனிதமானது.
 * நபிகள் நாயகம்.
* மனிதர்களிடம் நல்லெண்ணம் நிலவுகின்ற போது இப்பூமியில் அமைதியும் சமாதானமும் இருக்கும்.
 * இயேசு பிரான்.
* மாற்றம் இல்லாமல் முன்னேற்றம் ஏற்படமுடியாது இதற்கு இயலாதவர்களால் எதையும் செய்யமுடியாது
 * ஜோர்ஜ் பேர்னாட்ஷா
* வாழ்க்கையில் உண்மையாகவே வெற்றிபெற வேண்டுமாயின் அதற்கு சுருக்கமாகப் பேசுங்கள் நிறைய செயலாற்றுங்கள்.
 * சுவாமி சிவானந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தமிழீழம், சுன்னாகம் தெற்கு முருகேசப் பண்டிதர் வீதியைப் பிறப்பிடமாகவும்,
தற்போது கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட
திரு. சின்னத்தம்பி இராசையா அவர்கள் 18.02.2015 புதன்கிழமையன்று
இறைவனடி சேர்ந்தார்.



தோற்றம்
15.12.1927

மறைவு
18.02.2015

## அமரர். திரு. சின்னத்தம்பி இராசையா

(பேரன் இராசையா)

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னுப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - அன்னமுத்து ஆகியோரின் அன்பு மருமகனும், குலமணிதேவி அவர்களின் அன்புக் கணவரும், நடராஜா (ஆரணி தங்கமாளிகை - மொன்றியல்), காலஞ்சென்ற இரவீந்திரன், பத்மினிதேவி (மொன்றியல்), பத்மநாதன் (மொன்றியல்), செல்வராணி (தமிழீழம்-சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வாமதேவி, மகேஸ்வரி, இந்திரகுமார், அனுஷாம்பிகை, தியாகலிங்கம், (தமிழீழம்-சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்.

கிருசாந், தனுஜன், சிவசாந், சுரேகா, சுதர்சன், நவநீதன், லக்சனா, சிவசுதன், லக்சன், திவாகர், அஸ்வின், நிசாந், தாரணன், தாருஜன், சோபிதா ஆகியோரின் அன்புப் பேரனும், ஐதுசனின் ஆசைப் பூட்டனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் **21. 02. 2015** சனிக்கிழமை அன்று **55 Rue Gince, Montreal, QC, H4N 1J7** இல் அமைந்துள்ள **AETERNA Funeral Home** இல் மாலை **4:00** மணியிலிருந்து இரவு **9:00** மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு மறுநாள் **22. 02. 2015** ஞாயிற்றுக்கிழமை காலை **9:00** மணிமுதல் பகல் **12:30** மணிவரையும் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரிகைகள் நடைபெற்று, பி.பகல் **1:00** மணியளவில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

- நடா : 514.594.0978
- நாதன் : 514.865.1198
- பத்மினி : 514.344.9180
- செல்வராணி தியாகலிங்கம் : 011.94.21.224 0038



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னத்தம்பி இராசையா (பேரன்)



யாழ்ப்பாணம் சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவில் வாழ்ந்தவருமான சின்னத்தம்பி இராசையா 18.02.2015 புதன்கிழமை மொன்றியல் கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-அன்னமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், குலமணி தேவியின் அன்புக் கணவரும், நடராசா, காலஞ்சென்ற இரவீந்திரன் மற்றும் பத்மினி தேவி, பத்மநாதன் (கனடா) செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாமதேவி, மகேஸ்வரி, இந்திரகுமார், அனுஷாம்பிகை (கனடா), தியாகலிங்கம் (யாழ். மாவட்ட சமக்கார அமைப்புக்களின் அதிகார சபை தலைவர்) ஆகியோரின் பாசமிகு மாமனும், கிருஷாந், தனுஷன், சிவஷாந், சுரேகா, சுதர்சன், நவநீதன், லக்ஷனா, லக்ஷன், திவாகர், அஸ்வின் (கனடா), திஷாந் (கனடா), தாரணன், தாருஜன், சோபிதா ஆகியோரின் பாசமிகு பேரனும் லதுஷனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.02.2015) ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் இடம்பெறும். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் தெற்கு, சுன்னாகத்தில் உள்ள மகள் வீட்டில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

(56994) (16)

**க. தியாகலிங்கம் (மருமகன்)**

# கண்ணீர் அஞ்சலி



எமது தர்மகர்த்தா சபையின் நீண்டகால உறுப்பினரும், ஆலயத் திருப்பணிகள் பலவற்றை முன்னின்று செய்து தந்தவருமான

## சின்னத்தம்பி இராசையா

அவர்கள் கனடாவில் காலமான செய்தியறிந்து அதிர்ச்சியுற்றோம். அன்னாரின் ஆத்மா சிவபூதராயப் பெருமானின் திருவடி நிழலில் இளைப்பாறப் பிரார்த்திப்பதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தர்மகர்த்தா சபையினரும்,**
**பொதுச்சபை உறுப்பினர்களும்,**
**ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தானம்**

**சுன்னாகம் தெற்கு.**

(57039) (10.7.3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத் தலைவரின் ஆத்மா சிவபதமடைந்தபோது எங்கள் இல்லத்திற்கு நேரில் வந்தும், அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியோருக்கும் பல வழிகளில் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உறவினர்கள், நண்பர்களுக்கும், உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் இருந்து தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், மலர்வளையம், மலரஞ்சலி ஊடாக அஞ்சலி செய்தோருக்கும், துக்கச் செய்தியை அச்சிட்டு வெளியிட்ட அன்பர்களுக்கும், தொடர்பு சாதனங்கள் மூலம் ஆழ்ந்த அனுதாபங்களையும், கண்ணீர் அஞ்சலியினையும் தெரிவித்தவர்களுக்கும், அஞ்சலி கிரியையின்போது உதவியவர்களுக்கும், ஈமைக் கிரியை மற்றும் அந்தியேட்டி சபீண்டிகரணம், ஆத்மா சாந்தி பிராத்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும், சுகயீனமுற்றிருந்த வேளை வைத்தியசாலையில் உதவி புரிந்த வைத்திய நிபுணர்களுக்கும்,

இம் மலர் உருவாக்கத்திற்கு உதவிய 'சோக்கெல்லோ' சண்முகநாதன், குப்பிளான் தங்கராசா அவர்களுக்கும், இறுதி அஞ்சலிக்கான அறிவித்தலை செய்த I.T.R வானொலி, லங்காசிறி இணையம், இருசுப் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும், இம்மலரை வடிவமைத்த 'கொப்பி நெற்' சுதாகரன் அவர்களுக்கும்,


தாயகத்தில் எமது சகோதரியின் இல்லத்திற்கு நேரில்வந்து துயரத்தில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும், ஐயாவின் நினைவுப்பதிவை இவ் நினைவு மலருக்காக அனுப்பிவைத்தவர்களுக்கும் எங்கள் குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

• மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் •




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா வழி
## 20. 03. 2015 வரை






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




* காலஞ்சென்றவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சச்சிதானந்தா யோகிராஜ் அவர்களின்

# அருளமுதம்

உண்மையே பேசுக
நன்மையே பேசுக
அளவாகப் பேசுக
மெதுவாகப் பேசுக
இனிமையாகப் பேசுக
சிந்தித்துப் பேசுக
சமயமறிந்து பேசுக
சபையறிந்து பேசுக
பேசாதிருந்தும் பழகுக
பசியறிந்து உண்க
பகிர்ந்தளித்து உண்க
அளவறிந்து உண்க
ஆறுதலாக உண்க
நன்கு மென்று உண்க
நல்ல உணவு உண்க
கனிகள் நிறைய உண்க
உண்ணாதிருந்தும் பழகுக.

நடந்ததெல்லாம் நன்மைக்கே
இனி நடக்கப் போவதும் நன்மைக்கே

'ஞானவள்ளல்'
பரஞ்ஜோதி மகான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகரம் பிறின்டேஸ்-024 2223772